## ஊடக அறிவித்தல்

## மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி 2021

மேல் மாகாணத்தின் இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்குடன், இலக்கியப் போட்டிகளை நடாத்துவதற்கு மேல் மாகாண கலாசார, கலை விவகார அமைச்சினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் நிரந்தரமாக வசிப்போர் பங்குபற்றலாம். போட்டிக்கான படைப்பாக்கங்கள். தமிழ் ,சிங்களம், ஆகிய இரண்டு மொழிகளிலும் ஏற்றுக் கொள்ளப்படும் .

போட்டிப் பிரிவு, இலக்கம் மற்றும் போட்டியின் பெயர்

1.இளம் நாவல் போட்டி
( 20,000 - 25,000 சொற்கள்)

2. இளம் சிறுகதைப் போட்டி
(1000-1500 சொற்கள்)

3.இளம் கவிதைப் (புதுக்கவிதை) போட்டி
( 40-60வரிகள்)

4. இளம் கவிதைப் போட்டி (மரபுக்கவிதை) போட்டி
( 40-60வரிகள்)

5. இளம் பாடல் இயற்றல் போட்டி
( பாடுவதற்குப் பொருத்தமான தொகைச் சொற்கள் )

**விவரங்களும் நிபந்தனைகளும்**

1. ஒரு போட்டியாளருக்கு ஒரு போட்டிப் பிரிவுக்காக ஒரு ஆக்கத்தினை மட்டுமே முன்வைக்க இயலும் எனினும் ஒன்றுக்குமேற்பட்டபோட்டிகளுக்காக அவர் தமது ஆக்கங்களை முன்வைக்க முடியும்.
2. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று வயது 16-35 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
3. எல்லா ஆக்கங்களும் தமது சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். எந்த வகையிலும் வேறொரு படைப்பாக்கத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகவோ,தழுவலாகவோ, சார்ந்ததாகவோ இருத்தலாகாது.மேலும் இதற்கு முன்னர் எவ்வகையிலும் வெளியிடப்படாத ஆக்கமாகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் கிராம சேவை அலுவலகரிடமிருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் / அதன் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைத்தல் வேண்டும் .
5. ஒவ்வொரு படைப்பும் A4 அளவுள்ள கடதாசிகளில் , ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் எழுதி அல்லது கணினியில் பொறித்து தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஒவ்வொரு படைப்புக்கும் ஒரு விண்ணப்பப் படிவம் இணைக்கப்பட வேண்டும். போட்டியாளரின் அடையாளத்தைக் குறிக்கும் எந்த அடையாளமும் இருக்கக்கூடாது (மாதிரி விண்ணப்பப் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது).
7. ஒவ்வொரு ஆக்கமும்வெவ்வேறாக அனுப்பப்பட வேண்டும்.
8. படைப்புகளைஅனுப்பும்போது மூலப் பிரதியை அனுப்பக்கூடாததுடன் அதன் மூன்று பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.தெரிவாகாதா ஆக்கங்களின் பிரதிகளை திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை பண்பாட்டு, கலை நடவடிக்கை அமைச்சு மேற்கொள்ளாது.
9. ஒவ்வொரு போட்டியிலும் முதலாம், இரண்டாம் மூன்றாம் இடங்களோடு திறமையான மேலும் ஏழு ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்களும் பணப்பரிசுகளும் வழங்கப்படும்.
10. படைப்பாக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021 செப்டம்பர் 30 ஆந் திகதி ஆகும். அத்தினத்தில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, பின்வரும் முகவரிக்கு படைப்பாக்கங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். படைப்பாக்கங்களை அனுப்பும்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"**மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி **2021"** எனக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கும் போட்டியின் பெயரினை தெளிவாக எழுதுதல் வேண்டும்.

செயலாளர்
கல்வி, கலாசார, கலை நடவடிக்கை அமைச்சு
மேல் மாகாணம்,
இல. **204, 02** ஆம் மாடி,
புதிய மாகாண சபை காரியாலய கட்டடத் தொகுதி ,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.

11. மேல் மாகாணத்தின் இளம் எழுத்தாளர் போட்டிகள் தொடர்பாக நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

சிரிசோம லொக்குவிதான,
செயலாளர்,
கல்வி, கலாசார, கலை நடவடிக்கை அமைச்சு,
மேல் மாகாணம்.

தெடர்புகளுக்கு – திரு.நிஷாந்த லியனகே – கலாச்சார அலுவலர்
தொ.பே. **– 078-2420493**